584

போதனை விஷய பூங்கொத்து

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAR 1943
MADRAS
584

மாதமொருமுறை மலரும்



JL
189985

Lourduswami, B.A.

...ining School, Trichinopoly

மார்ச்சு 1943 மலர் 9

போதனமுறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	185
2.	சென்னை கல்வி இலாகா	187
3.	விடுகவி விடை	187
4.	அணியியல்	188
5.	ஆசிரியரும் சித்திரமும்	189
6.	இது என்ன?	190
7.	யோசனைக் கணக்கு	190
8.	பாடக் குறிப்பு	191
9.	யோசனைக்கணக்கு விடை	193
10.	வீரமைந்தன்	194
11.	தேளின் ஜீவிய வரலாறு	197
12.	'அறிஞர் வாய் முத்துக்கள்'	199
13.	'பள்ளித் திண்ணையில்'	200
14.	வினா விடை	202
15.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	203
16.	பெற்றோர் சங்கங்கள்	204
17.	மாணவர் கடமை (பாட்டு)	205

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	

...: + JAMES, *Bishop of Trichinopo*...

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAR 1943
MADRAS

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 33]   15 மார்ச்சு 1943   [மலர் 9

பத்திராதிபர் குறிப்புகள்

189985

New Admission: அடுத்த ஜூலை மாதம் இப்பாடசாலையில் சேர்ந்து போதனாமுறைப் பயில விரும்புவோர் இதனடியில் காணும் ஒழுங்குகளைக் கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்டுள்ள அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) வாங்கி, அதில் குறித்துள்ள விதிகளின்படி பூர்த்திசெய்து, அதை மே மாதம் 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் **தலைமை ஆசிரியருக்கு** அனுப்பவேண்டும். பாரம் ஒன்றுக்கு அணா 2 வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பியே தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

2. ஷை போதனா பயிற்சிக்கு **ஸெக்கண்டரி** கிரேடில் 40 மாணவர்களையும் **எலிமேண்டரி** கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்தியிருக்கிறது.

3. அடுத்த ஜூன் மாதம் 30-ம் தேதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின் முன் ஆஜராகி, ப்ரவேசக்கட்டணம் ரூ. 2–0–0 செலுத்தி ப்ரவேசப் பரீட்சை எழுதியபின் தெரிந்தெடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

4. ப்ரவேசக்கட்டணம் ரூ. 2–0–0-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, கேள்வி விடைப்பத்திரங்கள் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சேர்க்கை தினத்தன்று ரூ. 10-0-0 "டிபாசிட்" (Deposit) பணம் கட்ட வேண்டியது அவசியமாகும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இங்குள்ள போர்டிங் ஹாஸ்டலில் சேர, அட்வான்ஸாக (Advance) ரூ. 10 சேர்த்துக் கட்டவேண்டும்.

7. எலிமெண்டரி கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) வழங்கப்படும்.

* * *

வெள்ளிப்பதக்கப் பரிசு முந்திய வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும், இம்மாதத்தில் நடைபெறும் T. S. L. C. பரீட்சையில் பரீட்சை எழுதித்தேறி முதன்மை மார்க்கு வாங்கும், ஸெக்கண்டரி கிரேடு மாணவனுக்கும், எலிமெண்டரி கிரேடு மாணவனுக்கும் ஒவ்வொரு ஷி "பதக்கப் பரிசு" தலைமையாசிரியரால் அளிக்கப்படும்.

* * *

நம் பழய மாணவர் கட்டுரைகள். "பள்ளித்திண்ணையில்" என்ற தலைப்பினடியிலும் "அறிஞர் வாய் முத்துக்கள்" எனும் தலைப்பினடியிலும் நம் பழய மாணவர்களிலொருவர் N. R. திருவேங்கடம் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றை இம்மலரில் காண்க. அக்கட்டுரைகள் நம் ஆசிரிய நேயர்கட்குப் பெரிதும் பயனளிக்குமெனக் கருதி மெச்சுகிறோம். இன்னும் நம் பழய மாணவர் பலர் முன் வந்து நம் பூங்கொத்திற்கேற்ற விஷயதானம் புரிந்து தொண்டாற்றி வருவது மிகவும் விரும்பத்தக்க காரியமல்லவா?

ஜான்—அடே ராஜு, இந்த சட்டையை பாக்கெட் இல்லாமல் வைத்துக்கொண்டாயே! சில்லரைக்காசை எங்கே வைத்துக்கொள்வாய்?

ராஜு:—இப்போதுதான் காலணாவில் துளையிட்டு வைத்திருக்கிறதே. கயிறு கோர்த்து இடுப்பில் கட்டிக்கொள்ளக்கூடாதா?

M. Antonisamy.

சென்னை கல்வி இலாகா

(Proceedings of the Director of Public Instruction, Madras.) Dis. No. 585/43—Dated 6-2-43.

T. S. L. C. பரீட்சையில் தவறிப்போன ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியருக்கு கிராண்டு கணக்கிட்டு வழங்குவதைப்பற்றி, கல்வி டைரெக்டர் விடுத்துள்ள உத்திரவு பின்வருமாறு :—

T. S. L. C. பரீட்சையில் தவறிப்போகும் ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள் "எயிடெட் ஆரம்பப் பாடசாலையில்" வேலை பார்த்தால் அவர்களுக்கு, "பயிலாத ஸெக்கண்டரி கிரேடு" ஆசிரியருக்கு (Untrained Secondary Grade teacher) ஏற்பட்டுள்ள கிராண்டு தான் கிடைக்கும். அதாவது வருஷத்திற்கு ரூ. 144 மாத்திரம்தான்.

Untrained Secondary Grade teacher என்ற யோக்ய தாம்சை (Rule II—2—IV) பெருமலே, ஸெக்கண்டரி கிரேடில் சேர்ந்து படிக்க, கல்வி டைரெக்டரது விசேஷ அனுமதிபெற்று, போதனு முறை பயின்று வரும்போது, அந்த இரண்டு வருஷகாலம் பூர்த்தி செய்யாமல் நிறுத்திவிட்டு, பிறகு ஆசிரியர் வேலை பார்க்கப் போனுல், அத்தகையோர்க்கு எலிமெண்டரி ஹையர் கிரேடு பயிலாத ஆசிரியருக்கு (Untrained Elementary Higher Grade Teacher) ஏற்பட்டுள்ள கிராண்டுதான் கிடைக்கலாம். அதாவது வருஷத்திற்கு ரூ. 108 மாத்திரம்தான்.

விடுகவி விடை

(கொத்து 33, மலர் 8, பக்கம் 175)

விடைகள்: 1. தென்னைமரம். 2. காற்று, மேகம், கடல். 3. குதிரை. 4. பச்சை குத்திக்கொள்ளல்.

விடையளித்தவர்கள்: 1. S. Arpudasamy, Sempet; 2. P. Karuppannan, VI Std.; 3. G. Dharmanathan; 4. R. Vedamuthu; 5. Ponnunathan; 6. S. Gnanapragasam; 7. R. Vedamuthu, Teacher, Uppilipalayam; 8. V. Natesan, Lab. School, Chittoor.

வஞ்சப்புகழ்ச்சியணி

வஞ்சப்புகழ்ச்சியணியாவது :-வெளிப்படையாக நோக்குமிடத்து ஒருவரைப் புகழ்வது போலவும் உற்றுநோக்குமிடத்து அவரை யிகழ் வதாகவும் செய்யுள் செய்வதாகும்.

(உ-ம்) "போர்முடித்தானமர் பொருதுபுலம்புறு சொற்பாஞ்சாலி
பூந்தண்கூந்தற்
கார்முடித்தானிளையோர் முன்கழறிய வஞ்சினமுடித்தான்
கடவுட்கங்கை
நீர்முடித்தானிர வொழித்த நீயறியவசையின்றி
நிலைநின்றோங்கும்
பேர்முடித்தானிப்படியே யார்முடித்தாரிவனோடும்
பிறப்பதே யான்"

என்று கூறப்படும் செய்யுளில் வீமன் தருமபுத்திரன் அநேக காரியங்களைச் சிறப்புற முடித்தானென வெளிப்படையாகக் கூறி இறுதியாக உற்றுநோக்குமிடத்து ஒரு காரியமும் செய்திலன் என்று இழித்துக் கூறியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. பிறவுமிவ்வாறு வருதல் காண்க.

வஞ்சப் பழிப்பணி

வஞ்சப் பழிப்பணியாவது :—வெளிப்பட நோக்குமிடத்து ஒரு பொருளைப் பழிப்பதுபோலவும் உற்று நோக்குமிடத்து அப்பொருளைப் புகழ்வதாகவும் செய்யுளை அமைத்தலாகும்.

(உ-ம்) "நாணென்றா னஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர்மேவுஞ் சிவனே சிரிப்பன்றோ
நேராரூர் செற்றநிலை"

இச்செய்யுளில் அறுந்த கயிற்றையும், கல்வில்லையும், துருப்பிடித்த பாணத்தையும் படைக்கலமாகக்கொண்டு ஆற்றல்மிக்க திரிபுராதிகளை வெல்லப் புறப்பட்டது இகழ்தற்குரிய காரியம் என்று வெளிப்படையாக உரைத்து உள்ளூற உற்றுநோக்குங்கால் உலகையெல்லாம் அழிக்கும் ஆதிசேடனாகிய விடத்தினையுடைய அரவைக் கயிறாகவும், அழிதலில்லாத மேருமலையை வில்லாகவும், துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலகனாகிய விஷ்ணுவை அம்பாகவும் கொண்டிருந்தும் உனதாற்றல் தோன்ற நின்றொரு கோபச் சிரிப்பினாலேயே மும்புரத்தவரை வென்றாய். இத்தகைமை செயற்கரும் செயலாகும் எனப் பொருள்பட்டு நீ ஈடும் எடுப்புமற்ற தலைவனாயிருக்கின்றாயெனக் கூறப்பட்டிருத்தல் காண்க. பிறவுமின்ன.

M. A. S. T. P.

ஆசிரியரும் சித்திரமும்

(C. Venkatachalam)

நாம் மானதக் காட்சியில் காணும் தோற்றத்தை அல்லது உற்று நோக்கிய பொருளை வெளிப்படையாக கையினால் எழுதி அல்லது வரைந்து காட்டுவது சித்திரமெனப்படும். சித்திரத்திற்கும் சிற்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நினைவிலுள்ள தோற்றத்தை ஞாபகத்திலிருந்து கல்லிலோ, மரத்திலோ, அல்லது உலோகத்திலோ செதுக்கிக் காட்டினால் அது சிற்பமாகும். எவ்வாறு வீடு கட்டுவதற்கு தரைப்படம் (Plan) அவசியமோ அதுபோன்று சிற்பத்திற்கும் சித்திரம் அவசியமாயிருக்கிறது.

ஒரு ஓவியன் தன் மனதில் எழும் உற்சாகத்தையும் உருவத்தையும் தன் கையிலுள்ள எழுதும் கருவியால் பிறர் கண்ணுற்று ஆனந்திக்கத்தக்கவாறு தீட்டும் திறமையுள்ளவனாக இருக்கிறான். சித்திரம் படித்தவன், படியாதவன், முதியோர், இளைஞர், குழந்தைகள் முதலிய யாவரையும் பரவசப்படுத்த வல்லது. படங்கள்மூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். அநேக மைல்களுக்கப்பால் நடக்கும் காரியங்களைப் படிப்பறிவில்லாதவர்களும்கூட படங்களினுதவியால் நன்கு அறிந்துகொள்ளுகின்றனர். பிறர்பாஷை தெரியாதவர்கள்கூட படங்களினுதவியால் அந்நியருடைய கருத்தையும், பழக்க வழக்கங்களையும் ஒருவாறு அறிய முடிகிறது. எகிப்தின் பூர்வீகக் குடிகள் எழுத்து கண்டுபிடிப்பதற்குமுன் தங்கள் எண்ணங்களைச் சித்திரங்கள் மூலமாக வெளியிட்டு வந்தனர். அவர்கள் "ஹியரோகிளிபிக்" (Heiroglyphic) என்னும் சித்திர விளக்கத்தைத்தான் எழுத்துக்களாக உபயோகித்துவந்தனர்.

ஒரு பொருளின் தோற்றத்தை மற்றவர்களுக்குத் தெளிவாக விளக்குவதற்கு சித்திரம் மிகவும் பயன்படுகிறது. மேனாட்டு மைக்கேல் ஆஞ்சலோ (Michael Angelo) நம் நாட்டு ஓவியர் ராஜா ரவிவர்மா போன்றவர்கள் எவ்வளவு நேர்த்தியாகத் தங்கள் மானதக் காட்சியைச் சித்திரங்களில் வெளியிட்டிருக்கிறார்களென்பது அவர்களுடைய சித்திரங்களைப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும்.

குழந்தைகளுக்கு இயற்கையிலேயே படங்களைப் பார்த்து மகிழ்வதில் அவா அதிகம். போதனையின் சுவையைப் பெற படங்கள் பெரிதும் உதவுகின்றன. படங்கள், விஷயங்களை மனதில் நன்கு பதியச் செய்யும். இதுபற்றியே பேஸ்டாலஸி, லாக், பீரடேரிக் புரோபெல் முதலிய கல்வி நிபுணர்கள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட சித்திரம் முதலிய கைவேலைகள்தான் மேலான வழி என்று ரூபித்திருக்கிறார்கள். ஒரு விஷயத்தைக் குழந்தைகள் சித்திரத்தின் மூலமே இலகுவில் கிரகிக்க முடியும். காதினால் கேட்டுப் படிப்பதைவிட உற்றுநோக்கிப் படிப்பது ஸ்திரமானது. எல்லாவற்றையும் உற்றுநோக்கி அறிவது

சாத்தியமாகாது. எனவே போதிக்கும் விஷயத்தின் விவரங்களை விளக்கும் படங்களின் உதவியைக்கொண்டே போதித்தல் சிறந்த முறை. எல்லாப் பாடங்களுக்கும் அச்சுப்படங்கள் கிடைப்பது கடினம். அநேக படங்களை ஆசிரியரே அவ்வப்போது வரைந்து கொள்ளவேண்டியிருக்கிறது. குழந்தைகளுக்குப் படங்களைப் பார்ப்பதில்மட்டுமல்லாமல் அதைப்போல வரையவும் யத்தனிக்கிறார்கள். ஆசிரியர் வரைவதை நேரில் பார்த்துத் தாங்களும் வரைய முயலுகிறார்கள். குழந்தைகளின் இயல்பூக்கங்களை நசுக்கக்கூடாதென்று நாம் மனநூலில் வாசித்திருக்கிறோம். சிறுவர்களுக்கு சித்திரப் பயிற்சியில் உற்சாகமளித்து அவர்களது அபிலாஷையை விருத்தி செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையிலொன்று. இதற்கு ஆசிரியர் போதிய பயிற்சி பெற்றிருக்கவேண்டும். அதனால்தான் நமது கலாத்திட்டத்தில் சித்திரம் இடம்பெற்றிருக்கிறது.

இது என்ன? விடுகவி

1. கட்டி மாம்பழம் தொப்பென்று விழுந்ததைக் கண்டவர் இருவர்; எடுத்தவர் பத்துப் பேர்; ருசி பார்த்தவர் ஒருவர்; தின்றவர் பதினாறு பேர்.—(S. Arpudasamy, Sempet).

2. உச்சி வெள்ளை, நடு பச்சை, அடி சிவப்பு.—(Michael).

3. திருச்சி சிவப்பு, சேலம் கறுப்பு; உடைத்தால் பருப்பு, தின்றால் கசப்பு.—(S. Arulanandam, VII Std.)

யோசனைக் கணக்கு

இப்போது ஒரு தந்தையின் வயது அவன் மகனது வயதின் மூன்று மடங்கு ஆகும். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தந்தையின் வயது மகனுடைய வயதின் ஐந்து மடங்காக இருந்தது. இப்போது அவர்கள் ஒவ்வொருவருடைய வயது என்ன?

—(R. Arulsusai Gnanu.)

பிரசங்கியார் :—(சற்று வேகத்துடன்) ஒருவன் பிறர் அறிய விளங்காமல் பேசுபவன் முட்டாள்.

கூட்டத்திலிருந்த ஒருவர் :—நீங்கள் சொல்லுகிறது ஒன்றும் புரியவில்லையே!

A. Jesudas, Teacher.

பாடக்குறிப்பு

பாடம்: பூகோளம். வகுப்பு: V. நோக்கம்: காங்கோ ப்ரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கை; அங்குள்ள பிராணிகள், தாவரங்கள் முதலியவற்றைப்பற்றிய அபிப்பிராயத்தை உண்டுபண்ணுதல்.

உபகரணம்: உலகப்படம் (ஆப்பிரிக்கா கண்டம்); காங்கோ வாசிகளின் உருவப் படங்கள்; ஆங்குள்ள மிருகங்கள்; காடுகள் சம்பந்தமான படங்கள்; அவர்களது குடிசைகளின் மாதிரிகள்.

பீடிகை: வட ஆப்பிரிக்காவில் "சகாரா" பாலைவனம்; நம் நாட்டிலுள்ள "தார்" பாலைவனம்—இவற்றைப்பற்றி ப்ரஸ்தாபித்து, இவை உஷ்ணப்ரதேசங்கள் என்க. ஷை சகாராவிற்கு தெற்கில் **காங்கோ நதி** பாய்கிற ஆரண்ய ப்ரதேசம் அமைந்திருப்பதைப் படத்தில் காட்டி நோக்கத்தை வெளியிடுக.

விஷயம்: காங்கோ ப்ரதேசம்; மத்திய ஆப்பிரிக்காவில்; காங்கோ நதி பாய்கிறது; அடர்ந்த காடுகள்; அதிக மழை; அதிக உஷ்ணம்; குளிர்காலம் கிடையாது; காடுகளில் வானளாவிய விருக்ஷங்கள்; பருத்த பின்னல் கொடிகள்; பெரிய இலைகள்; சூரிய கிரணங்களும் ஊடுருவிச் செல்லாதபடி காடு அடர்ந்திருப்பது.

யானை, காண்டாமிருகம், குரங்கு ஜாதிகள், ஆற்றில் முதலைகள், கொசுகுகள் ஏராளம், பலவகை பாம்புகள்.

மக்கள்: காட்டுமிராண்டிகள், பிக்மிகள் எனப்படுவர். நாகரீகம் இல்லை; குள்ளர்கள்; கறுமை நிறம்; சிறிய மூக்கு; பெரிய வாய்; உடை இலைகளே; உணவு பச்சை மாமிசம்; வேட்டையாடுவர்; மீன் பிடிப்பர்; குரங்கைப்போல் மரத்துக்கு மரம் தாவுவர்; பழங்களையும் உண்பர்; யானை மாமிசத்தை உலர்த்தி வைத்துக்கொண்டும் தின்று வாழ்வர்; கிளைகளைக் கொண்டு வீடு கட்டிக்கொள்வர்; மண் வீடு; இலைகள் தான் கூரை; வீடு குடைபோலிருக்கும்.

குளிக்கமாட்டார்கள்; துர்நாற்றம்; நீந்தத் தெரியாது; அந்நியர்களைக் கொன்றுவிடவேண்டுமென்ற எண்ணம்; பக்கத்திலுள்ள நீக்ரோவர்களிடம் உறவு உண்டு; மாமிசத்தை அவர்கட்குக் கொடுத்து தானியங்களை வாங்கிக்கொள்வர்.

முறை: விஷயத்தைக் கூறும்போது, உபகரணங்களை (படங்கள் மாதிரிகள்) கையாடி, க. ப.-வில் குறிப்புகள் எழுதிப் போதிக்கவும். இப்பாடம் பொதுவாக வர்ணனையே. எனவே விஷயத்தை நன்கு அறிந்து தெளிவுறக் கூறவும்.

இதனடியில் வரும் சம்பாஷணை பாட போதனைக்குப் பெரிதும் உதவும். எனவே, "நடித்துக் காட்டல்" முறை இதில் பயன்படுவதை அறிக:—(P. S. Madalaimuthu).

இந்திய சிறுவன்:—சபையோர்களே, உங்களுக்கு என் வந்தனம். இப்போது நீங்கள் ஓர் அயல்தேசத்து ஜனங்களைப்பற்றி தெரிந்து

கொள்வீர்கள். கவனமாய் இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காங்கோ சிறுவன் :—கையில் வில்லும் அம்பும் கொண்டுவரல். ஓர்வித பயங்கர சத்தம்—ஹீம், ம், ஹீம், ஹீம்............

இ. சி.: (பயந்துகொண்டு) ஐயனே, நீங்கள் யார்? எந்தத் தேசத்தவர்? உங்களைப் பார்க்கும்போதே எனக்குப் பயமாயிருக்கிறதே.

கா. சி.: பயப்படவேண்டாம்; நான் காங்கோ நாட்டைச் சேர்ந்தவன்; நான் பிக்மீஸ் ஜாதியைச் சேர்ந்தவன்; உங்கள் நாட்டுக்கு மேற்கில் கடலுக்கப்பால் வசிக்கிறோம்.

இ. சி.: எதாவது நீங்கள் சாதம் சாப்பிடுவீர்களா?

கா. சி.: என்ன? சாதமா? சாதமென்பது என்னவென்றுகூட எங்களுக்குத் தெரியாது. சாதமெல்லாம் எங்களுக்கு எதற்கு?

இ. சி.: என்ன ஆச்சரியம்! பிறகு சாப்பாட்டிற்கு என்ன செய்வீர்கள்?

கா. சி.: (வில்லைக் காட்டி) ஹீம். வேட்டையாடி ஆகாரத்தை தேடிக்கொள்வோம்.

இ. சி.: நல்லது. நீங்கள் எப்படிப்பட்ட வீட்டில் வசிக்கிறீர்கள்? கொஞ்சம் சொல்லக்கூடாதா?

கா. சி.: நாங்கள் குடியிருப்பது ஓர் கூடார வீடு; நாங்கள் இந்தக் கூடாரமான வீட்டை, குச்சிகளை வளைத்து பூமியில் ஊன்றியும் அதன்மேல் இலைகளையும், சருகுகளையும் பரப்பி, அதன்மேலே மண்ணைக்கொண்டு கூடாரம்போல் செய்து அக்கூடார வீட்டில்தான் வசிப்போம். என் அம்மாள் வீட்டு வேலைகளைப் பார்த்துவருவாள். நான் தினந்தோறும் வேட்டையாடித் திரும்புவேன். என் தகப்பனாரும் வேட்டைப் பிரியர்தான்.

இ. சி.: நீங்கள் துணிகள் கட்டமாட்டீர்களா? இது என்ன மரப்பட்டைகளையும், இலைகளையும் கட்டியிருக்கிறீர்கள்?

கா. சி.: துணிகளெல்லாம் எங்களுக்கு எதற்கு? எங்களுக்கு இவைகளே சிறந்த ஆடைகளாகும். இது எங்கள் நாட்டின் வழக்கம்.

இ. சி.: (பிக்மீஸ் சிறுவனின் நெஞ்சில் ஒரு விரலால் தொட்டு முகர்ந்து பார்த்து) மூக்கைப் பிடித்துக்கொண்டு—அஞ்ஞுஞ்ஞுஞ்ஞா ....கெட்ட வீச்சமாயிருக்கிறதே.

கா. சி.: (இந்திய சிறுவன் நெஞ்சை தொட்டு முகர்ந்துகொண்டு அஞ்ஞுஞ்ஞுஞ்ஞா என்று மூக்கைப் பிடித்துக்கொண்டும் இந்திய சிறுவனிடம் சற்றுநேரம்கழித்துப்போய்) என்னப்பா—அஞ்ஞுஞ்ஞுஞ்ஞா—எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?

இ. சி.: சரிதாங்க, நீங்க குளித்து எத்தனை யுகம் இருக்குங்க?

கா. சி.: கணக்கேதுங்க, வழக்கேதுங்க. சுமாராய் மூன்று யுகமிருக்கும். உனக்கு அதைப்பற்றி என்னப்பா கவலை?

(ஷை வசனம் சொல்லும்போது 4 விரலைக் காட்டுதல்).

இ. சி.: கொஞ்சம் பொறுங்கள். 3 யுகமென்று சொல்லிக் கொண்டு 4 விரலைக் காட்டுவது எதற்கு?

கா. சி.: (நான்கு விரலைக் காட்டி) இதுதான் எங்கள் நாட்டில் மூன்று.

இ. சி.: உங்கள் நாட்டில் பள்ளிக்குப் போய் படிக்கமாட்டீர்களா?

கா. சி.: எங்களுக்குப் படிப்பெல்லாம் எதற்கு? எங்கள் தொழிலைக் கற்றுக்கொண்டால் போதும். அங்கு படிப்பதுமில்லை, பறிப்பதுமில்லை.

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 33, மலர் 8, பக்கம் 178)

விடை: ஆட்டின் விலை ரூ. **10.** மாட்டின் விலை ரூ. **40.**

ஷை விடையளித்தவர்கள்:—1. N. Mudiappan, Teacher, R. C. St. Mary's El. Sch. Trichy. 2. Pupils—S. N. Sriraman; P. P. Maharajan; S. Narendram of Vivekananda Vidyalayam, Thevaram. 3. P. Gopalan VIII Std. R. C. Mod. Sch. Trichy. 4. Pupil—Teachers—M. Ignacimuthu; I. Susaipragasam; R. Arulsusai Gnanu; A. Sivalingam; K. Palani Pandaram; S. Gnanapragasam; Dharmanatham; Ponnunathan of R. C. Trng. Sch. Trichy. V. Natesan, Chittoor.

பிழை திருத்தம்: சென்றமாத இதழில் சங்கீதப்பகுதி "A. R. P. பாட்டு" சரணங்கள் 2-வது அடி 3-வது வரியில் ஆன்மா யமைந்திருக்கும் என்பதை ஆழமா யமைந்திருக்கும் என்றும் 4-வது வரியில் வேளை தவிர்த்திட தேமாந்திடுவீரே என்பதை வேளை தவிர்த்திடா தமர்ந்திடு வீரே என்றும் திருத்திப் பாடவும்.

வீரமைந்தன்

(ஓர் சிறு நாடகம்)

[T. Alangaram]

('சுமார் எண்ணூறு வருஷங்களுக்கு முன் கடைசி இந்து சக்கரவர்த்தி பிருதிவி இராஜனுக்கும் மகம்மது கோரிக்கும் யுத்தம் நடக்கிறது. டில்லிமாநகரைச் சுற்றிலும் ஒரே இரணகளம். அக்களத்தின் ஒரு கோடியிலே வரிசையாக ராஜபுத்திரரின் படைவீடுகள். இச்சமயத்தில்தான் கீழ்க்குறிப்பிடப்படும் சம்பவம் நடைபெறுகிறது')

பாத்திரங்கள் : அலங்காரன் (அக்கினிகுல இளைஞன்) பிருதிவி ராஜன், (கடைசி இந்து சக்கரவர்த்தி) விக்கிரம சிம்மன், மாரப்பன் (இவர்கள், இளைஞனின் நண்பர்) வீரசிம்மன் (சேனாதிபதி ; ராஜசூரன், (சேனாதிபதியின் துணைவன்) விஜயவல்லபன் (படைத்தலைவன்) சேவகர் முதலியோர்.

காட்சி 1

இடம் : ராஜபுத்திரரின் பாளையம் **காலம் : இரவு :**

'அக்கினி குல இளைஞன் அலங்காரன், ஒரு கூடாரத்தினுள் அங்குமிங்கும் உலாவுகிறான் : எதைப்பற்றியோ யோசனை செய்பவன்போல் தோன்றுகிறது.' பிறகு ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவன்போல் தனக்குள்ளே'

ஆம். என் தந்தையைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லையே. ஒருவேளை யுத்தத்தில் இறந்துதான் போய்விட்டனரோ? அப்படியிருந்தால் அவரது உடலாவது அகப்படவேண்டுமே. அதையுங் காணோமே? ஒருவேளை எதிரிகள் அவரைக் கைதுசெய்து கொண்டுபோயிருப்பரோ.........

(திடீரென விக்கிரமசிம்மனும், மாரப்பனும் உள் நுழைதல்)

மாரப்பன் : வீரா! ஏதோ பலத்த யோசனையில் இருப்பதுபோல் தெரிகிறதே. துர் அதிர்ஷ்டம். இன்று நாம் தோற்கும்படியாகி விட்டது. (ஏதோ யோசித்துக்கொண்டு) உன் தந்தை வந்து விட்டாரா.

விக்கிரம சிம்மன் : யார் சௌம்யராயர் வந்து விட்டாரா, என்று கேட்கிறாய். அவர் ஏன் வரப்போகிறார். இரணகளத்தில் முதுகு காட்டி ஓடினதாகவும், முகமதியர்கள் அவரைப் பிடித்துச் சிறை செய்ததாகவும் எல்லோரும் பேசிக்கொள்கிறார்களே.

அலங்காரன் : (கோபாவேசத்தோடு) நண்பர்களே என்ன சொன்னீர்கள் என் தந்தையா முதுகு காட்டி ஓடினார்? இருக்காது : இந்த இழிவைப்போக்கி என் தந்தையின் மானத்தைக் காப்பாற்றுவேன். இப்பொழுதே அவரிடம் சென்று கேட்கிறேன் : (போதல் திரை விழல்).

189985

காட்சி 2

'பிருதிவிராஜன் கொலு இருக்கிறான். மந்திரிகள் சேனாதிபதிகள் படைத்தலைவர் முதலியோர் இருமருங்கிலும் அமர்ந்திருக்கின்றனர்.'

பிருதிவிராஜன் : (சேனாதிபதியை நோக்கி) வீரசிம்மரே! இன்று நாம் அபஜெயமடைய நேரிட்டது. எனினும் பரவாயில்லை. நாளை எவ்வாறாகினும் பட்டை முடித்து வாகை சூடவேண்டும். நம்முடலில் ஒரு துளி இரத்தம் இருக்கும் வரையிலும் மகமதியரை எதிர்த்து நிற்போம்.

சேனாதிபதி : அப்படியே மகாராஜ்! நாளை எவ்விதத்திலும் எதிரிகளைத் தோற்கடிப்போம் என்பது நிச்சயம். அம்மை பவானி நமக்கு அருள்புரிவாள்.

'உதடு துடிக்க, கண்கள் கோவைப்பழம்போல் ஜொலிக்க, கையிலே எழடிநீளம் வேல்கம்பு, இடுப்பின் இருபுறமும் கருக்கமைந்த ஈட்டி, மற்றொருபுறம் நீண்ட உடைவாள் இவை சகிதமாய் அரசன் முன் வந்து அடிவணங்கி' அரசே நமஸ்காரம்:

அரசன் : மைந்த! ஏதுகாரணமாய், இவ்வளவு கோபத்துடன் இங்கு வந்தாய்?

அலங்காரன் : அரசே! பகைவர் எம்மாத்திரம்? அன்னார் கலங்கி ஓடவேண்டும்! அல்லது அவர்களின் தலைகள் தரையில் உருளவேண்டும். இரண்டில் ஒன்று நிச்சயம். இன்றேல் வீரசுவர்க்கம் புகுவேன் என் உடைவாள் மீது ஆணை! எனக்குப் படைத்தலைமை தந்தருளல் வேண்டும்.

அரசன் : (வியப்புடன்) என்ன? வீரசிம்மரே, அலங்காரன் கூறுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே.

சேனாதிபதி : (எழுந்து) அரசே! பச்சைப்பாலன் மீசை அரும்பவில்லை. பகைவனோ பலவான். துணைவலியும்பெற்று நிற்கிறான். இளங்கன்று பயமறியாது. (அமரல்)

சேனாதிபதியின் துணைவன் : (எழுந்து) அரசே! என்னே இப்பாலன் பதைப்பு! சொல்லுக்கேற்ற செயல் இருக்கலாம். ஆகினும் அபிமன்யுவைப் போலாகி விடுவனே. என் செய்வது? பழுத்த படைத்தலைவருக்கு அபவாதம் பிறக்குமே. அக்கினி குலத்தின் ஆண்மையே ஆண்மை. (அமரல்)

படைத்தலைவன் : (எழுந்து பதைபதைப்புடன்) அரசே! இது பிள்ளைப்பேச்சு! ஷாபுதீனுடைய சேனையோ கடல்போன்றது. கோடரிக்காம்பன் ஜயசந்திரனும் சீறி நிற்கிறான். நாளையே போரின் முடிவு காணவேண்டு மென்பது தங்கள் தீர்ப்பு பால்மணம் மாறாப் பாலனுக்காப் படைத்தலைமை?

அரசன் : (தனக்குள்ளே) பேஞக்கத்திக் கூரியதுதான். பேஞவை நன்கு சீவும். பெருமரத்தைப் பிளக்குமோ? விஷப் பரீட்சை செய்தல் அழகோ? (அலங்காரன் பக்கம் திரும்பி) வீர மைந்த! வினைவலி, தன்வலி, மாற்ருன்வலி எல்லாம் எண்ணியே கருமம் புரிதல் வேண்டுமென்பதை நீ அறியாயா?

அலங்காரன் : (கண்களில் நீர் ததும்ப, நெற்றியில் புருவம் ஏற, கை உடைவாளைத்தடவ அரசன் முன் சென்று) இறைவ! குலத்தின் மானம் குலைவதா? தந்தையின் கீர்த்தி மங்குவதா? மயிரொன்றை யிழப்பினும் கவரிமான் உயிர் தரியாதே. புலிக்குப் பிறந்து பூனை யாவதோ? என்னே! என் தந்தையின், வீரத்தந்தையின்...(அரச னின் பாதங்களில் குப்புற விழுகிருன்).

(பிருதிவி ராஜன் எழுந்திருந்து இளைஞன் கைகளைப் பிடித்துத் தூக்கி) மைந்த! உன் தந்தையின் கீர்த்திக்கு என்ன குறைவு?

அலங்காரன் : (அழுகையோடு) அரசே! யாது சொல்வேன்! மகோபா யுத்தத்திற்குச் சென்ருர் என் தந்தை. போர் முடிந்தபின் இரணகளத்தில் அவர் உடல் அகப்படவில்லை. முதுகுகாட்டி ஓடி விட்டதாக என் சகாக்கள் பேசுகின்றனர். அந்த இழி மொழியைப் போக்கி என் பிதாவின் மானத்தைக்காத்தல் என் கடமையன்ருே? ஆனதுபற்றியே படைத்தலைமை வேண்டுகின்றேன். தந்தருள்க.

அரசன் : (ஆவேசத்துடன்) என்பிள்ளாய்! உன் தந்தை வீர விளக்கு! தியாக சமுத்திரம்! கயவர் உரைகண்டு கலங்காதே! வீரக் கொழுந்தை இழிகூறும் நாக்கை இரு துண்டாக்க இதோ என் வாள்! உன் தந்தையின் வீரத்தை இழித்துக் கூறுவோன் யாவன்? வீர லட்சுமி அவனைப் பலிகொள்வாள். உன் தந்தை என் உயிர்த்தோழன். சௌம்யராயன் தீரத்தை, தியாகத்தை உலகம் அறிய உரைக்கிறேன்.

(சபையைப் பார்த்து) சபையோர்களே! மகோபா யுத்தத்தில் கொடிய வாட்போர் நடந்தது. என்னுடன் தோளோடு தோள் கலந்து இவன் தந்தை சமர்செய்தார். இருவரும் சேர்ந்து பகைவரில் பலரை வெட்டி வீழ்த்திஞேம். முடிவில், யான் படுகாயமடைந்து, பிரக்ஞை தவறிப் பாரின்மீது சாய்ந்தேன். அப்பால் கொஞ்சம் நினைவு வந்தது. கண்விழித்துப்பார்த்தேன். என்னைச்சுற்றிலும் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எனது உடலைக் கொத்தித் தின்பதே அவற்றின் நோக்கம். என் அங்கங்களை அசைக்க முடியவில்லை. சோர்வுடன் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

என்பக்கத்தே சௌம்யராயர் இருகால்களும் இழந்து கிடந்தார். நகர்ந்து வந்து பறவைகளை ஓட்ட அவரால் ஆகவில்லை. உடனே தமது உடலிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சதையை நறுக்கி ஆகாய வீதி யிலே வீசினர். சதைத்துண்டுகளை நோக்கிக் கழுகுகள் போயின.

அப்பால் என் நினைவு தப்பிவிட்டது. கடைசியிலே வைத்தியசாலையில் விழித்துப்பார்க்க, என் படைத்தலைவர் புடைசூழ இருக்கலானேன்.

தன்னை வந்தடைந்த ஒரு புறுவின் உயிரைக் காக்கவேண்டி, முன்னம் ஒரு சக்கரவர்த்தி சிபி என்பான் தன் சதையை அரிந்து கொடுத்தான். சௌம்யராயரோ என்னையும் என்மூலம் தேசத்தையும் காக்கக்கருதித் தமது சதையை நறுக்கி வீசிய தியாக சமுத்திரம்!

அவ்வீர திலகத்தை அறியாது உளறும் மடையர் யாவர்? டில்லி ராஜ்யத்தில் கோழைகளும் இருப்பரோ? (இளைஞனை நோக்கி) என் மைந்த! உனது துடிப்பின் காரணம் உணர்ந்தேன். படைத்தலைமையும் தந்தேன், பரிபவம் தவிர்க்க. வீரலட்சுமி உன்னுடன் இருப்பாளாக.

அலங்காரன்: அரசே! என் பாக்கியமே பாக்கியம். இப்பொழுது தான் என்மனம் நிம்மதியடைந்தது. மகமதியரை வென்று வாகை சூடி வருவேன் என்பது திண்ணம். (போதல்) (திரை விழுகிறது).

தேளின் ஜீவிய வரலாறு

(T. Savarirajan)

மக்களை துன்புறுத்துவதிலும், பயமுறுத்துவதிலும் செ[illegible]பது தேள். உருவத்தில் சிறியதெனினும் விஷத்தில் கொடியது. நாகம் எவ்வளவு பெரிதெனினும் அதனைக் கொல்லாது அநேகர் விடுவர். சிறிய தேள்குட்டி ஒன்று யார் கண்ணிலாகிலும் பட்டிடின் அது உயிர் பிழைத்துப்போவது மிகக் கடினம். அப்படிப்பட்ட ஒரு ஜீவனின் வரலாற்றை அறிவது அவசியமே.

ஆண்தேளைவிடப் பெண் தேள் உருவத்தில் பெரியது. இவைகள் கூட்டமாய் வசிப்பதில்லை. ஏகாந்தமாய் வாழ்ந்தாலும் சமயா சமயத்தில் ஒரு தேள் மற்றொரு தேளைக் காணின் மிக மரியாதையாய் நடந்துகொள்ளும். இரவில் ஓர் தேள் உலாவி வரும்பொழுது மற்றொரு தேளைப் பார்த்ததும், இரண்டும் கைகளைக் கோர்த்துக்கொண்டு முகத்தோடு முகம் வைத்துப் பேசும். பிறகு உடலின் முன்பாகத்தை சரியாய் தரையில் படியவைத்து வால்களைத் தலைக்குமேல் தூக்கி, வாலோடு வாலைத் தேய்த்தும், வாலின் இறுதியிலுள்ள வளைந்த பாகத்தால் ஒன்றையொன்று பிடித்துக்கொண்டு இன்பமாய் பேசிக்கொள்ளும். இந்த ஏற்பாடு சாதாரணமாய் மக்கள் தங்களுக்குள் செய்துகொள்ளும் நமஸ்காரம், சலாம்போடுதல், கைகுலுக்கிக் குசலம் பேசுதலை ஒத்திருக்கும்.

இவ்விதம் தேள்கள் தங்களுக்குள் சந்தித்துக் குலாவினாலும், அவைகளுக்குள் மணவாழ்க்கை ஏற்பட சந்தர்ப்பம் நேரிடின் அவைகள் இன்னும் பிரீதியாய் நடந்துகொள்கின்றன. இவைகளுக்குள் திருமணம் பெண் தேளின் சம்மதத்தைப் பொருத்தது. அவ்விதம் ஒரு பெண் தேள் கல்யாணத்திற்கு உடன்பட்டிடின், ஆண் தேள் அதன் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு மரியாதையாய் பின்னோக்கி அழைத்துச் செல்லும். இவ்விதம் பின்னோக்கிச் செல்லும் ஊர்வலம் பல மணி நேரம் நடைபெறும். இச்சமயத்தில் ஆண் தேள் அவைகள் இரண்டும் குடியிருக்க ஒரு நல்ல இடத்தைத் தேடிக்கொண்டு வரும். ஒரு கல்விடுக்கு சரியானதெனக் கண்டதும் ஆண் தேள் தன் பின்னங் கால்களால் அவ்விடுக்கைப் பெரிதாக்கி, வாலினால் மண் முதலியவைகளை வெளியே தள்ளும். பெண் தேளுக்கு யாதொரு வேலையுமில்லை. எனினும் ஆண் தேளின் கைப்பிடியிலிருந்து வெளிச்செல்லமுடியாது. பிறகு இரண்டும் புதிய மனைக்குள் செல்லும். அங்கும் பெண்தேளின் செல்வாக்கு அதிகம். கட்டிய வீடு அதற்குப் பிரியமில்லையெனின், மறுபடியும் புதிய வீடு பார்க்க இரண்டும் வெளியே புறப்பட்டுவிடும்.

இவ்விதம் வேறு வீட்டைத் தேடிச் செல்லும்பொழுது மற்றொரு ஆண் தேள் இந்தப் பெண் தேளைக் கவரக்கூடும். அவ்விதம் செய்வது அவைகளுக்குள் சகஜம்தான். அத்தகைய எண்ணத்துடன் நெருங்கும் தேளை, மற்ற தேள் எதிர்க்காது. சாதாரணப் பிராணிகளைப்போல் ஒன்று தோல்வியடைந்து ஓடும்வரையிலோ அல்லது மற்றொன்று மடியும்வரையிலோ சண்டைசெய்வதில்லை. முதல்தேள் பெண்ணின் ஒரு கரத்தைப் பிடித்துக்கொள்ளும், எதிரி மற்றொரு கையைப் பற்றிக்கொள்ளும், ஒவ்வொன்றும், பெண் தேள் தன் பக்கவில் வரவேண்டி பலம்கொண்டு இழுக்கும். இது பள்ளி மாணவர்கள் ஒரு பெரிய கயிற்றை இருபுறமிருந்து இழுத்து விளையாடுவதை ஒக்கும். இந்த இழுப்புப் போட்டியில் எது ஜெயித்துப் பெண் தேளைத் தன்புறம் இழுத்துக்கொள்ளுகிறதோ, அதற்குத்தான் அந்த பெண் தேள் சொந்தம். ஜெயம்கொண்ட தேள் பெண் தேளுடன் வீடு தேடச் சென்றுவிடும். தோல்வியுற்றத் தேள் மௌனமாய் தன்வழியே சென்றுவிடும். இவைகளின் இல்லிடம் சாதாரணமாய் கல்விடுக்கு அல்லது வீடுகளின் மேற்கூரையாகும். அவ்வீடுகளில் புதிய தேள் தம்பதிகள் இன்புற்று இருப்பர்.

பெண்தேள் கல்யாணம் செய்துகொண்ட அன்று இரவே, பொழுது விடிவதற்குள் ஆண்தேளைக் கொலைசெய்துவிடுகின்றது. அத்துடன் அதன் உடலையே காலைப்போஜனமாக உண்டுவிடுகின்றது. என்ன கொடுமை. மண அறை பிண அறையாக மாறிவிட்டது. ஆனால் அழுகையும் கூக்குரலும் அங்கில்லை. உலகத்தில் நடைபெறும் விந்தைகளில் இதுவும் ஒன்று என்பதில் சந்தேகமென்ன? சினையான

பெண் தேளின் தேகம் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு நாட்களில் முதுகுபுறமாக வெடிக்க பல சிறிய தேள் குட்டிகள் வெளியாகின்றன. தேகம் வெடித்தவுடன் தாய்த்தேள் இறந்துவிடுகின்றது. தேள் குட்டிகளுக்கு ஆகாரம் வேண்டியது அவசியம்தானே. இறந்த தாயின் உடலை இவைகள் சில நாட்கள் சாப்பிட்டு உயிர்வாழ, ஏக கடவுளின் கிருபாகடாட்சத்தால் நகரும் சக்திபெற்று தாமே ஆகாரம் தேடிக்கொள்கின்றன.

'அறிஞர் வாய் முத்துக்கள்'

(N. R. திருவேங்கடம்)

1. எவனொருவன் தான் சொல்லியவண்ணம் நடக்கத் தவறுகிறானோ அவனுடைய வார்த்தைகள் வாசனையற்ற அழகிய மலரைப் போன்றதாகும். (புத்தர்)

2. நிராசை என்ற படிகளைத் தாண்டியவன் அவன் வாழ்க்கையின் அந்தகாரத்தைக் கடந்தவனாவான். (கூப்பர்)

3. உன்னால் எது முடியுமோ அவ்வேலையை செய்வதில்மட்டும் திருப்தியடைக; செய்யமுடியாத காரியத்தை செய்யக்கூடுமென்று சொல்லித்திரியாதே. (எலிஸபத் பாரட் பிரௌனிங்)

4. அறிஞன் என்போன் அன்பினால் பிறரை வெல்வோன். (சீனப் பழமொழி)

5. எவனொருவன் பிறருடைய சுதந்திரத்தை மறுக்கிறானோ அவன் அச்சுதந்திரத்திற்கு அருகதையற்றவன்; ஒருக்கால் பெற்றாலும் பட்சபாதமற்ற இறைவன் ஆட்சியில் அதிக நாள் அதை அனுபவிக்க இயலாது. (ஆபிரகாம் லிங்கன்)

6. உண்மைக் கிறீஸ்துவன் ஒருவன் பிறரது குற்றங்களைப்பற்றி விசாரிக்கவோ அவைகளைப்பற்றி விவாதிப்பதையோ விரும்பான். சதா தன் காரியத்திலேயே ஈடுபட்டிருப்பான். (அதனேசியஸ்)

7. கடினமான வேலையைச் செய்யும் சக்திதிறமை (Talent) யன்றேல், அச்சக்தி அவ்வேலைக்கு ஒரு கூடுமான பதிலியாக (Substitute) வாவது இருந்தே தீரும். (கார்பீல்ட்)

8. தன்னிடம் இல்லாத பொருளுக்காக துக்கிக்காமலும் தன்னிடமுள்ள கொஞ்சம் பொருளைப்பார்த்து குதூகலமடைபவனுமே உண்மை அறிஞனாவான். (எபிக்டிடஸ்)

"பள்ளித் திண்ணையில்"

(N. R. திருவேங்கடம் L. F. H. E. School, Megalathur)

1. மாணவர் ஏன் படிக்கவேண்டும்?

எங்கள் பள்ளி மாலை 5-30-க்கு முடிந்தது. சிற்றுண்டி முடித்து கையில் ஒரு தினசரிப் பத்திரிகையோடு பள்ளித் திண்ணையில் வந்து அமர்ந்தேன். அவ்வமயம் கீழ்க்கண்ட சம்பாஷணை நிகழ்ந்தது.

ஆசிரியர்: நாய்க்கர் வாழ்! வரவேணும்! வரவேணும்! தாங்கள் இல்லாமல் இந்த மாலைப்பொழுது போகமாட்டேன் என்கிறது!

நாயக்கர்: சந்தோஷம்! வாத்தியார் சார்! ஏது என்பேரில் தங்களுக்கு அவ்வளவு கிருபை?

ஆசி.: அதுவா? எல்லாம் தங்கள் கிருபை எங்களுக்கு வேண்டியிருப்பதனுல்தான்.

நாயக்.: வாத்தியார் சார்! அது கிடக்கட்டும்! வழக்கம்போல தாங்கள் இன்று அதிகம் 'குஷி'யாக இல்லையே! ஏன்?

ஆசி.: குஷியா! எங்கேயிருக்கும்! எல்லோரும் பிள்ளைகளை வீட்டில் போட்டு பூட்டிவைத்துக்கொண்டால்?

நாயக்.: இல்லை சார்! அப்படி ஒருவரும் பூட்டிவைக்கமாட்டார்கள். ஏதோ வேலை வெட்டியிருக்கும்! மேலும் கிராமாந்திரப் பையன்கள் படித்து என்ன பண்ணப்போகிருர்கள்?

ஆசி.: என்ன செய்யமுடியாது? அதைச் சொல்லுங்கள்?

நாயக்.: இல்லை சார்! என்ன பெரிய உத்தியோகத்திற்குப் போகப்போகிருர்கள் என்று சொன்னேன்?

ஆசி.: ஏன் போகப்படாது? மேலும் படிப்பதே உத்தியோகத்திற்குத்தானு? எல்லோருமே உத்தியோகத்திற்குப் போகவேண்டுமானல் பிரஜைகளே இருக்கமாட்டார்களே! எல்லாரும் பல்லக்கு ஏறவேண்டுமென்றல் பல்லக்கைத் தூக்க ஒருவன் வேண்டாமா? படித்தவன் வேறு வேலை செய்யப்படாதென்று சட்டமா? உலகில் வேறெந்த நாட்டில் இப்படி உத்தியோகத்திற்கு வீங்கிப்போய்க் கிடக்கிருர்கள்? ஒன்னுவது படிக்கும்போதே உத்தியோகம் உத்தியோகம் என்று நினைப்பதால்தான் உருப்படாமல் போகிறது?

நாயக்.: சரி சார்! உத்தியோகம் வேண்டாம். படித்தவன் படிக்காதவனைப்போல எங்கே வேலை செய்கிருன்? நாசூக்காக திரியவே பார்க்கிருன்.

ஆசி.: நீங்கள் சொல்லுவது தவறு. படிக்காத மூடங்கள் எத்தனை ஊரை வெளிச்சம் போட்டுக்கொண்டு திரிகின்றன? எல்லாம் வீட்டில் கொடுக்கும் பழக்கத்தில் இருக்கிறது.

நாயக்.: அது சரி சார்! வீட்டில் சில சில்லரை வேலைகள் இருக்கிறது. இன்னும் குடும்பத்தில் அநேக இடைஞ்சல்கள் வந்துசேரு

கின்றது. அப்பொழுது பையனை நிறுத்தவேண்டியதாகத்தானே இருக்கிறது?

ஆசி.: வாஸ்தவம்தான்! இந்தப் பாழும் உலகில் எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் அநேக இடைஞ்சல்கள் ஏற்படுவது இயற்கையே. அதற்காக நல்ல காரியத்தை செய்யாமல் விடலாமோ? நாம் மனது வைத்தால் அந்தக் கஷ்டங்களை எளிதில் சமாளிக்கலாம்?

நாயக்.: அதுவும் சரி! ஸார்! இன்னொரு விஷயம்! தற்காலக் கல்வி முறையானது சீர்கேடானது. பிள்ளைகள் வாழ்க்கைக்குப் பயன் படுவதாய் இல்லை. ‘பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது’ என்பதே போல் வெறும் ‘ஏட்டுச் சுரைக்காய்” படிப்பாகவல்லவா இருக்கிறது? இத்தகைய படிப்பு எதற்கு?

ஆசி.: உம்! இது சரியான கேள்வி! நீங்கள் சொல்வது முற்றும் உண்மையல்ல. ஓரளவு உண்மையிருக்கிறது. இப்பொழுது தயாரித்திருக்கும் புதிய பாடத்திட்டத்தில் அவைகளை நீக்கப் பெரிதும் முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஆண்பிள்ளைகள் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வதோடு கைத்தொழில்களும், விவசாய வேலையும் கற்றுக்கொள்கிறார்கள். பெண் பிள்ளைகள் தையல் வேலை, பின்னல் வேலை, சமையல்வேலை, குடும்ப வைத்தியம் போன்ற விஷயங்களையும் கற்றுக்கொள்ளலாம். இன்னும் அவர்களுக்கு சங்கீதம், நாட்டியம் இவைகளுக்கும் பயிற்சி உண்டு. இப்பாடத் திட்டத்தின் முழுப் பலனையும் இப்பொழுது அடையமுடியாமல் இருப்பதன் காரணம் பிள்ளைகள் சரிவர வராமல் இருப்பதுதான். சரிவரப் பிள்ளைகள் வந்தால் பாடங்கள் சரிவர நடக்கும். அதனால் நல்ல பயனையும் அடையலாம். பெருவாரியாகப் பிள்ளைகள் வந்து பாடங்களும் பூரணமாக நடந்தால் இப்பாடத்திட்டத்தின் பலனை அறியலாம். நாளடைவில் இன்னும் அதைத் திருத்தலாம். குழந்தை குற்றம் செய்தால் கையையா வெட்டுவது? குழந்தையை அல்லவா திருத்தவேண்டும்? ஆகவே படிப்பில் குறையிருந்தால் படிப்பு முறையை திருத்தலாமே தவிர குழந்தையைப் பள்ளியை விட்டு …வத்தக்கூடாது.

நாயக்.: ஏது ஸார்! உங்களிடம் பேசி வெல்லமுடியாது! நீங் …சொல்வதும் நியாயமாகத்தான் தெரிகிறது! இனி என் பையனை …காக பள்ளிக்கு அனுப்புகிறேன். சரி, இருட்டிவிட்டது. நான் …வருகிறேன்.

…சி.: நாயக்கர்வாழ்! உங்கள் பையனை அனுப்புவதுமாத்திரம் …ல்ல. இன்னும் உங்களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டிலும் … பையன்களை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். தினமும் சாயங் …ப்படி வாருங்கள். இதைப்போல் ஏதாவது பேசலாம்.

…க்.: ரொம்ப சரி ஸார்! வருகிறேன். (தொடரும்)

வினு விடை

(U. Amaladasan, Teacher, R. C. T. School)

1. மீன் நம்மைப் பார்க்கவும் கேட்கவும் கூடுமா?

உயிர் காலேஜிற்கு, அல்லது மீன்கள் காப்பாற்றப்படும் 'ஸூ' (Zoo) முதலான இடங்களுக்குச் சென்ருல், இக்கேள்விக்குப் பதிலை நாம்கண்கூடாக, சந்தேகமறக் காணலாம். மீன்கள் கண்களால் நம்மைப் போலவே பார்க்கின்றன. காதுகளாலும் கேட்கின்றன. செம்படவர்கட்கு இவ்வுண்மை நன்ருய்த் தெரியும். இதனுல்தான் மீன்பிடிக்க பலவகை நிறங்களையுடைய இரைகளை அவர்கள் உபயோகிக்கின்றனர். மீன்களுக்கு வர்ணங்களின் மட்டில் விருப்பு அதிகம். ஆனுல் மீன்கள் அவ்வளவு நன்ருகக் கேட்பதில்லை என்று தெரிகிறது. அல்லாவிடில் செம்படவர் சங்கிதத்தை உபயோகித்து மீன்களைப் பிடிக்கலாம் அல்லவா? எனினும் மீன்கள் கேட்கின்றன. ஆனுல் காதுகளைவிட கண்களே அவைகட்கு அதிகம் பயன்படுகின்றன. உன்னைக் கண்டவுடனேயே மீன்கள் ஓடிவிடுகின்றன அல்லவா?

2. கடல்நீரிலுள்ள உப்பு எங்கிருந்து வந்தது?

இவ்வுப்பு ஆறுகள்மூலமே கடலை அடைந்தது என்று நான் சொன்னுல் நீங்கள் ஆச்சரியமும் சந்தேகமும் கொள்வீர்கள். ஆனுலும் நான் சொல்வது முற்றிலும் உண்மை.

மண்ணில் உப்பு உண்டு என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா? காய்கறிகளில், விசேஷமாய் கீரை வகைகளில், உப்பு உண்டு என்று விஞ்ஞான பாடங்களில் படித்திருக்கிறீர்களே. அவ்வுப்பு மண்ணில் தானே இருக்கிறதென்று பார்த்தீர்கள். சரி. ஆறு எவ்வளவு தூரம் மண்மீது ஓடுகிறது? அவ்வளவு இடங்களிலும் இருக்கும் உப்பு என்ன ஆனது? ஆறுகள்தானே கடலுக்குக் கொண்டு சென்றிருக்கவேண்டும். ஆனுல் ஆற்றுநீர் உப்பு கரிக்கவில்லையே! உண்மைதான். ஆற்றுநீரில் சிறிது உப்புதான் இருக்கிறது. ஆதலால் அவ்வுப்பு நமக்குத் தெரிவதில்லை. ஆனுல் கடலிலோ எத்தனை ஆறுகள் உப்பைக் கொண்டுவருகின்றன? இரண்டாவது இயற்கை நெருப்பான சூரி[illegible] காய, கடல்நீர் ஆவியாகிறது. உப்பு பின்தங்குகிறது. இவ்[illegible] உலகம் உண்டானதுமுதல் நடக்கிறது. இதனுல்தான் கட[illegible] உப்பு அதிகம் கரிக்கிறது. இப்பொழுது உங்கள் ஆச்சரியமும் [illegible]கமும் எங்கே?

பொடி போடுகிறவர்:—ஏன் ஸார், பொடி போடுகிறது[illegible]குக் கெடுதலாமே?

டாக்டர்:—அதெல்லாம் இல்லை ஸார், மூளையுள்ள[illegible] பொடி போடுகிருன்?

P. Gopalan, [illegible]

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

"10-2-43 & 11-2-43" Boarding day—இச்சுபதினங்களில் நம்பாடசாலை Boarding day வைபவம் வெகு குதூகலத்துடன் நடைபெற்றது. 11-2-43 வியாழக்கிழமையன்று அர்ச். லூர்துமாதா திருநாள்—அஃது நம் பாடசாலைத் தலைமையாசிரியரும், நம் போர்டிங் General Prefect-ம் ஆகிய சங். A. லூர்துஸ்வாமியவர்களின் திருநாளுமல்லவா! இதனைச் சிறப்பாய்க் கொண்டாடுவதில் ஆசிரியர்களும், உள், வெளி மாணவர்களும், பிள்ளைகளும் தங்கள் உற்சாகத்தையும் ஆவலையும் வெகுவாய் வெளிப்படுத்தினர்.

10-2-'43 மாலை ஆசிரியர்களும் வெளி மாணவர்களும் சங். ஸ்வாமியார் அவர்களை நம் சபாமண்டபத்தில் வரவேற்று, உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்து, பாடல்கள், ஆடல்கள் மூலமாய்த் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். சங். ஸ்வாமியார் அவர்கள் அன்னவர்கட்குத் தம் மகிழ்ச்சியையும், ஆசிகளையும் கூறவே அன்றைய வைபவம் இனிது நிறைவெய்தியது. மேலும் அன்று ஆசிரியர்களால் சங். ஸ்வாமியார் அவர்கட்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

11-2-'43 வியாழன் காலையில் போர்டிங் மாணவர்கள் ஷெ விழாவை வெகு சிறப்பாய் கொண்டாடினர். லூர்துமாதா கெபி வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சங். லூர்துஸ்வாமி அவர்களால் பாடல்பூசை தொடங்கியது. பின்னர் 15 பேர் புதிதாக சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். நம் சபா மண்டபத்தில் சங். ஸ்வாமியார் அவர்களை போர்டிங் மாணவர்கள் வெகு உற்சாகத்துடன் வரவேற்று, உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தனர். கீதங்களும் ஆடல்களும், சம்பாஷணைகளும் சிறப்பாய் நடைபெற்றன. இவற்றையெல்லாங் கண்டானந்தித்த சங். தலைவர் அவர்கள் தம் மகிழ்ச்சியை அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு தம் மனமார்ந்த ஆசீர்வாதத்தை [illegible]வே விழா இனிது நிறைவுற்றது.

[illegible] ஷெ விழா ஞாபகார்த்தமாய் பின்னர், புகைப்படம் (Group [illegible]o) எடுக்கப்பட்டது.

[illegible]6-2-'43. நம் மாதிரிப்பாடசாலை மாணவர்களது உல்லாசப் [illegible]னம்:—VI, VII, & VIII வகுப்பு மாணவர்கள், நம் திருச் [illegible]சமீபத்திலுள்ள "பஞ்சு இயந்திரசாலைக்கும், (Trichinopoly [illegible] Mills) கீழ் வகுப்பு மாணவர்கள் திருச்சி அரசாங்க போதனை [illegible] பாடசாலையில் ஏற்பாடு செய்திருந்த "கல்வி கண்காட்சி [illegible]ார்வையிடவும் சென்றனர்.

பெற்றோர் சங்கங்கள்

தீண்ணியம் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கம். 12-1-43-ல் ஷை சங்கக் கூட்டம் லால்குடி ரேஞ்சு ஸீனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் அவர்களது தலைமையின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது.

S. Savarinathan, Teacher.

பேநூர் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கக் கூட்டம் 27-1-43-ல் திரு. P. M. மருதமுத்து முத்திரியர் அவர்களது தலைமையில் கூடிற்று. கல்வியின் அவசியத்தைப்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்ந்த பின், ஆடல் பாடல்களுடன் கூட்டம் முடிந்தது.

A. Jesudasan, Secretary.

முசிரி தாலூகா, **மேட்டுப்பாளையம்** போர்டு பெண் பாடசாலை பெற்றோர் சங்க விழா 8-2-43-ல் ஸ்ரீ N. P. ராமய்யா, B.A. அவர்களது தலைமையின்கீழ் குதூகலத்துடன் நடைபெறலாயிற்று. மாணவிகள் கும்மி கோலாட்டங்கள் நிகழ்த்திக் கூடியிருந்த, பெருந் தொகையினரையுங் களிக்கச்செய்தனர். தலைவர்களது சொற்பொழிவுக்குப் பின் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டதோடு கூட்டம் இனிது கலைந்தது.

A. Margaret, Secretary.

எலமனூர் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கம் 17-2-43-ல், S. பாக்கியசாமி, B.A அவர்களது தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமதி V. வீரம்மாள் அவர்கள் பெண் கல்வியைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். கடைசியாக அக்கிராஸனர் தமது முடிவுரையைக் கூறவே, கூட்டம் இனிது முடிந்தது.

கும்பகோணம் ஸ்ரீராம எலிமெண்டரி பாடசாலை போட்டிப் பந்தய விளையாட்டு வைபவமும், பரிசளிப்பும் 30-1-43-ல் நடைபெற்றது. ஷை நகர் துரைத்தனக் கல்லூரித் தலைவர் Dr. K. C. சாக்கோ, B.A., D.S.C., M.I.E., I.E.S. அவர்கள் தலைமை வகித்தனர். Mrs. சாக்கோ அவர்கள் ஷை விளையாட்டுகளில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். அவ்வமயம் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தகும். தலைவர்கள் பேருரைகள் நிகழ்ந்தபின் ஷை வைபவம் இனிது முடிவுபெற்றது.

R. Ramamiruthachariar, Manager & H

27-2-'43-ல் விஜயாபுரம் Moses Mixed School முத பெற்றோர் சங்க விழா வெகு விமரிசையாய் கொண்டாடப் பாடசாலை மாணவர்களும் மாணவிகளும் மிக்கத் தேர்ச்சியுடன் தம், நடனம், கும்மி, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள ஞற்று அனைவரையும் ஆனந்த பரவசமாக்கினர்.

S. Moses

189985

மாணவர் கடமை

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

ஹிந்துஸ்தானி இராகம்] [ஆதி தாளம்

(கூடி மருந்தரைப்போம்—என்ற மெட்டு)

பல்லவி

கா	கப	கரி	ரிக	ஸா	;	ரிஸ	நிஸ	
கே	ளும்.	பா.	லர்க	ளே	.	குண	மாய்	
கா	கப	கரி	ரிக	ஸா	;	ரிஸ	நிஸ	
வா	ழும்.	வழி	தனை	யே	.	குண	மாய்	
கா	கப	கரி	ரிக	ஸா	;	;	;	
வா	ழும்.	வழி	தனை	யே	.	.	.	

சரணங்கள்

ஸா	ஸஸ	கக	கம	மப	பா	;	பக	
கா	லையில்	எழுந்	திரு	தின	மே	.	அதி	
	,,	,,		மப	பா	;	;	
	,,	,,		தின	மே	.	.	
கப	பப	பப	பத	கப	கா	;	;	
கட	வுளை	தொழு	திடு	நல	மே	.	.	
மா	மம	மா	மம	மத	தா	;	தப	
வே	லைகள்	செய்	திடும்	முன	மே	.	நீ.	
	,,	,,		பத	தா	;	;	
	,,	,,		முன	மே	.	.	
பத	பம	மா	மப	கம	கரி	கரி	ஸரி	
விரு	ப்பமு	டன்	குளி	சுக	மே	சுக	மே.	(கேளும்)

(மற்ற சரணங்களை இதேமாதிரி பாடவும்)

2. பாடங்கள் படித்தபின் விரைவாய்—தின(ம்)
ஆடைகள் உடுத்தி நீ நேராய்
பள்ளிக்கு சென்றிடு மகிழ்வாய்—நீ
புள்ளிகள் கற்றிட புகழ்வாய் புகழ்வாய்— (கேளும்)

3. உன்குரு சொற்களைக் கேட்டு—நீ
நன்மைகள் யாவையும் பெற்று
என்றும் நற்பிள்ளையாய் வாழ்ந்து—நீ
இன்பமுடன் பெயர் ஏற்க ஏற்க— (கேளும்)

உன்னுயிர் போல் பிறர் பொருளை—நீ
எண்ணிக் காப்பது நலமே
நன்மைகள் செய்திட நாட்டில்—நீ
முன் வருவது பெரும் ஸ்லாக்யம் ஸ்லாக்யம்— (கேளும்)

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/—from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

WANTED one Secondary grade trained passed teacher—Salary full grant every month and free quarters.

Apply to: **MANAGER,**
Vedavalli Thayar Aided Ely. Sch
T. Varadarajapuram, TRIC

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trich